திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 28
சென்னை, 12—2—49

வீச்சு 24

இன்பம் பிறக்க வழி!

[பெரியார் ஈ. வெ. ரா.]

[கூட்டுறவு! இந்தச் சிறு சொல்லிலே மக்கட் சமுதாய வாழ்க்கையில் இன்பம் தழைப்பதற்கான பெரு வழி அடங்கியிருக்கிறது என்னும் உண்மையை, பெரியார், இக் கட்டுரையில் சுவைபட விளக்குகிறார். சோவியத் ரஷ்யாவில் முன்னர் அவர் சுற்றுப்பயணம் செய்தபோது அங்கு அவர் கண்ட பல நிகழ்ச்சிகளையும் அவற்றின் உட்பொருளையும் கட்டுரை நெடுக அவர் சொல்லிக்கொண்டே போவது கட்டுரையின் சுவையையும் சிறப்பையும் பன்மடங்கு அதிகப்படுத்துகிறது.]

ன் (கோவாப்ரேடிவ்) கூட்டு சங்கங்கள் என்ற விஷயத்தில் யில் கொஞ்சம் அக்கரை ண்டவனாய் இருந்தவன். ாலும் இன்றைய நிலைமையா நான் கோவாப்ரேடிவ் சைடிகளிலிருந்து சிறிது விலகி ட்சிய அபிப்பிராயமுடையவ இருக்கிறேன். ஏனெனில் பார்த்தாலும் கூட்டுறவு பனங்களை சுயநலத்திற்கு உப கித்துக் கொள்வதும் அவற் உத்தேசங்களுக்கு விரோத பணக்காரர்கள் அதில் ஆதிக் செலுத்துவதுமாய் இருந்து வரு யாரும். நண்பர் ஒருவர் ஒரு ம் என்னிடம் பேசிக்கொண் த பொழுது நம்முடைய நிலை ானது இப்படித்தான் இருக்க முடியுமென்று குறிப்பிட்டார். அது மிகமிக உண்மையேதான். ஏனெனில் நம் நாட்டில் நிலைபெற்றுள்ள பல்வேறு விஷயங்களையும், சமுதாய முறைகளையும் அடியோடு மாற்றாமல் நம்முடைய ஜனசமூகத்திற்கு நன்மையைக் கொண்டு வந்து

(4-ம் பக்கம் பார்க்க)

எங்கெங்குக் காணினும் கருஞ்சட்டையடா!

இந்திய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் இனி சர்க்கார் விருந்துகளில் கலந்துகொள்ளும்போது நீண்ட கருப்பு அங்கியும், வெள்ளை பைஜாமாவுமே அணிந்திருக்க வேண்டும் என்று டில்லியிலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

—"ஹிந்து" 5—2—49

சிறு நாடகம்:

மதம் — முதலாளித்வத்தின் முடிக்கயிறு!

[மதம் மக்களை மயக்கும் அபின் என்றார் சிந்தனைச் சிற்பி காரல் மார்க்ஸ். மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை என்றார் மாவீரர் லெனின். மதம் மனித சமுதாயத்திற்கு நஞ்சு என்கிறார் புரட்சித் தலைவர் பெரியார். ஆம்! அது உண்மை என்று எக்காளமிடுகிறது தன்மான இயக்கம். அது உண்மையாவது எங்ஙனம்? இந்தச் சிறு நாடகம் விடை சொல்லும்:]

இடம்: கோயில்.

நேரம்: காலை.

பாத்திரங்கள்: புரோகிதர்கள், ஏழை மக்கள், சாது.

நூற்றுக் கணக்கான ஆண், பெண், குழந்தைகள் அடங்கிய பாட்டாளிகளின் பட்டாளம் ஒன்று ஒரு கடவுள் விக்கிரகத்தின் முன் நின்று முறையிடுகின்றது:—

ஓ கடவுளே! எங்கள் வாழ்க்கை முழுமையிலும் இரண்டறக் கலந்திருக்கும் கொடிய பஞ்சத்தைப் பார்த்துக் கொண்டு சகித்து மௌனம் சாதிக்கும் கடவுளே, தங்களை வணங்குகிறோம். எங்களைக் காப்பாற்றும், காப்பாற்றும்.

சதாகாலமும், தங்களையே தொழுகிறோம். ஆனால் தாங்கள் சிறிதும் செவி சாய்ப்பதில்லை.

"அதுவும் எங்கள் நன்மைக்கே" என்று நம்பும்படி கற்பிக்கப்பட்டிருக்கிறோம். அவ்வாறே நாங்களும் நம்புகிறோம். நாங்கள் எப்பொழுதும் நம்புகிறவர்கள். யார் எதைச் சொன்னாலும் நம்புகிறோம். அப்படியெல்லாம் நம்பியும் இன்னும் பட்டினி கிடக்கிறோம்.

தயவு செய்து எங்களைக் காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்! நாங்கள்—ஏழைகள், ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்படுபவர்கள், உம்முடைய மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டவர்கள், உணவற்றவர்கள், ரத்தமற்றவர்கள்.

குப்பைமேடுகளிலும், அழுக்கு மூலைகளிலும், குடிசைகளிலும் ஆடுமாடுகளைப்போல் சதா 'துன்பம்' என்னும் கருவிலேயே வளர்ந்து வருபவர்கள். ஆதரவற்றவர்கள். ஏனைய ஜனங்களால் வெறுத்து ஒதுக்கித்தள்ளப்பட்ட, பசிப்பிணியால்வாடி வதங்கும் அனாதைகள், எங்களைக் காப்பாற்றும்! கடவுளே காப்பாற்றும்.

(அருவருப்பும், அலட்சியமும் நிறைந்த ஒரு சிரிப்பு விக்கிரகத்தின் பின் புறமிருந்து கேட்கிறது)

மீண்டும் ஏழை மக்கள்: எங்கள் நெஞ்சுலர்ந்திருக்கிறது. எங்கள் குழந்தைகளின் உதடுகளெல்லாம் காய்ந்திருக்கின்றன. இன்னும் சில இறந்து கொண்டிருக்கின்றன.

எங்களுடைய குடிசைகளில் தானியமே கிடையாது, ஆனால் ஒரு சிலருடைய களஞ்சியங்களில் தானியங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்கள் விலைக்கு வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். எங்களால் விலைக்கு வாங்க முடியாது; விலைகள் உயர்ந்து விட்டன. அந்தோ கஷ்டம்! நாங்கள் என் செய்வோம்? எங்கள் கையில் காசில்லை. இதோ தங்களுக்கு புஷ்பங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

மற்றொருவர்: நான் வெறுங்கையோடு தான் வந்திருக்கிறேன்.

ஒரு பெண்: இதோ நான் தேங்காய் பழம் கொண்டு வந்திருக்கிறேன். என் கையிலிருந்த காப்பை விற்றுத் தேங்காய் பழம் வாங்கினேன்.

மீண்டும் ஏழைகள்: சதா துன்பம்! ஆண்டவனே பேசக்கூடாதா? நாங்கள்—ஏழைகளாகியநாங்கள்—ஆதரவற்ற நாங்கள் ...பசியால் மடிகின்ற நாங்கள், சதா காலமும் ஏன் துன்பத்திலும், கஷ்டத்திலும் அழுந்தித் தவிக்க வேண்டும். தாங்கள் வாயைத் திறந்து பேசக்கூடாதா? ஆண்டவனே! எங்கள் ஆண்டவனே! நாங்கள் எதையும் சகித்துக்கொள்வோம். ஆனால் ஓ கடவுளே! எங்கள் குழந்தைகள் பசிப்பிணியால் மடிகின்றன. இந்தக் கொடுமையை நாங்கள் எப்படி சகிப்போம்? கொடுமை! அந்தோ கொடுமை! என்றென்றும் துன்பம்! எங்காவது தீப்பற்றிக் கொண்டால் எங்கள் குடிசைகளே அதிவிரைவில் பற்றிக் கொள்கின்றன. காலரா முதலிய தொத்து நோய்களால் எங்களில் அனேகர் ஈக்களைப்போல் மடிந்துவிடுகின்றனர். மழை வந்தால் எங்கள் குடிசைகள் ஒழுகுகின்றன. எங்கள் குழந்தை குட்டிகளெல்லாம் வெள்ளத்தில் மிதக்கின்றன. ஆற்றில் வெள்ளம் வந்து விட்டால் எங்கள் குடிசைகளையெல்லாம் கங்காதேவி கபளீகரம் செய்து விடுகிறாள். அன்பான ஆண்டவனே! தங்களைத் திருப்திப் படுத்துகிறோம். எங்களைக் காப்பாற்றும் காப்பாற்றும்.

(விக்கிரகத்தின் பின்புறம் தங்க நாணயங்கள் விழுகின்ற சப்தம் கேட்கின்றது.)

இன்னும் எவ்வளவு காலம் கஷ்டப்படுவது. நாங்கள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியது எங்கள் 'தலைவிதி' போலும்! அறிவாளிகளோ எங்களைப் பார்த்து நாங்கள் கஷ்டப்படத்தான் வேண்டுமென்கிறார்கள். எங்கள் எஜமானர்களும் அவ்விதமே கூறுகிறார்கள். முன் ஜென்மத்தில் செய்த வினையை இப்போது அனுபவிக்கிறோமென்கிறார்கள். அது எங்கள் கர்மவினை என்கிறார்கள். அதையே அடிக்கடி சொல்லி வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் நல்ல வீடுகளில் யாதொரு வேலையும் செய்யாமல் பணக்காரர்களாக சௌகரியமாய் வசித்து வருபவர்கள் வண்டி வண்டியாய்த் தானியங்கள் வாங்கி சேமித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் முன் ஜென்மத்தில் நல்ல காரியங்கள் செய்திருப்பார்களாம். அந்த விதம் சொல்லியே எங்களை நம்பச் செய்கிறார்கள், நாங்களும் நம்புகிறோம். ஆனால் இந்த ஜன்மத்தில் அவர்கள் எந்த நல்ல காரியமும்

செய்வதைக் காணேம். ஆனல் அநேக காரியங்கள் செய்கிருர்கள். அவை நல்ல காரியங்களா? அல்ல. ஆனல் செல்வவான்கள் கெட்ட செய்கைகள் செய்வார்களா என்கிருர்கள். அப்படியானல் அவர்களிடமுள்ள தானியத்தில் ங்களுக்குக் கொஞ்சம் கொஞ்சம் கிர்ந்து கொடுத்தால் அது நன்மை யான காரியமாகாதா? "கட்டாயம் செய்வார்கள், கடவுள் சம்மதமிருந் தால். எல்லாம் அவர் விருப்பப் படிதானே நடக்கும்?" என்று சொல்கிருர்கள். அப்படியானல் கடவுள் நம்மை வெறுக்கிருரா என்ன? வறியராகிய நமக்கு அவ ருடைய சித்தம் மிகவும் கொடுமை யான-சகிக்க முடியாத துன்பத் தோடு கூடிய பயங்கரத் தோற்றத் தோடு வருகிறது. காலரா, பிளேக், நெருப்பு, வெள்ளம், பஞ்சம் முத லிய இந்த தோற்றத்தோடேயே நம்மை ஆசீர்வதிக்கிருர்.

இவை மட்டுமா? வரிப்பளு, அதிக வேலை, தூசி, உஷ்ணம், கல் உடைத்தல், பாரமான சுமைகளை தூக்கல், வியர்வை, களைப்பு, அப ராதம், எஜமானனின் கடுங்கோபம் பசவு, தண்டனை இது போன்ற பரிசுகளையும் நமக்கு அளிக்கிருர். நமக்கு அவர் அளிக்கும் தோற்றம் இது.

ஆனல் வேறு சிலருக்கு வேறுவித மாய் தோற்றமளிக்கிருர். நல்ல சாற்று, சுவையான உணவு, பெரிய வீடுகள், பட்டு மெத்தைகள், பிர காசமான விளக்குகள், அசையாத வாகனங்கள், ஆடல் பாடல்கள், சிரிப்பு, சந்தோஷம் இவை முதலி ன பணக்காரர்கட்கு அவர் அளிக்கும் தோற்றத்தின் சின்னங் கள்!

எப்படி இருந்தாலும் அவருடைய சித்தத்தை ஏற்று நாம் அநுபவிக்க வேண்டியதுதான். அவ்விதமே நாம் போதிக்கப்பட்டு வருகிறேம். ஒரு சிலர் ஏழையோர்க்கு இதை போதிக்கிருர்கள். எல்லோரும் அந்த ஒரு சிலரது சித்தப்படி அடங்கி நடக்கவேண்டுமாம். ஏனெ னில் அந்த ஒரு சிலரது சித்தம் கட வுளது சித்தமாம். கடவுளே காப் பாற்று! இந்த பரிதாபகரமான தலைவிதி சித்தாந்தத்திலிருந்து எங் களைக் காப்பாற்றும்!!

(அக்கோவிலின் மற்றொரு பக் கம் நடைபெறும் ஒரு செல்வந்தர் விவாகம்—அங்கு நடக்கும் நடன சத்தம், கைகள் கொட்டும் சத்தம் காதைத் தொளைக்கிறது)

பசி......பசி......எப்படிச் சுடு கிறது? பிள்ளை பெற்றவளுக்குத் தெரியும் பிரசவ வேதனை என்பது போல பசியை அநுபவித்தவர் களுக்கே அதன் வேதனை தெரியும். ஒரு சிலருக்கு அது தெரியவே தெரியாது. ஏழையோருக்கு அது தெரியும், அதிக காலமாகத் தெரி யும். பசியென்ற நெருப்பு வயிற் றைச் சுடுகிறது.

மறுபடியும் ஏழைகள்: ஓ ஆண்டவனே! இப்போது ஒரு கைப்பிடிதானியமே வேண்டும். அதற்காகவே தங்களை வணங்குகி ரேம்.

எங்களது பெண்களின் கண் ணீர் தங்கள் மனதைக் கரைப்ப தில்லையா? எங்களது குழந்தைக ளின் சோர்ந்த கண்கள் தங்கள் கருணையை ஈர்ப்பதில்லையா? ரத் தம் வற்றிய அவர்களது உடல் தங் கள் கண்ணேட்டத்தை அழைப்ப தில்லையா? உழைத்து ஒடிந்துபோன அவர்களது சரீரம் தங்களது பெரு மையைக் குறைப்பதில்லையா?

லட்சக்கணக்கானவர்கள் தங்கள் தங்கள் சுயமரியாதையை இழந்து மிருகங்களாகிக் கொண்டிருக்கும் போது ஆண்டவனுகிய தங்கள் சுயமரியாதையை மட்டும் நிலை நாட்ட இயலுமா? கஷ்டங்களெல் லாம் புண்ணியமானவை யென்று அந்த ஒரு சிலர் சொல்லுகிருர்கள், ஆகையால் அவர்கள் கொடுக்கிற கஷ்டங்களுக்காக நாம் அவர் களுக்கு வந்தனம் செலுத்த வேண் டுமாம். இது என்ன நியாயம்?

(வழக்கம்போல் மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு பிராமண புரோகிதர்கள் உள்ளே வருகிருர் கள்.)

அதோ அவர்கள் வருகிருர்கள்; மோட்ச வீட்டின் திறவுகோல் அவர்களிடமே இருக்கிறதாம்! அவர்கள் மிகுந்த அறிவாளிகளாம்!

புரோகிதர்கள்: இதென்ன ஒப் பாரி வைக்கிறீர்கள். நீங்களெல் லாம் என்ன மிருகங்களா? நிம் மதியான இந்த இடத்தை அசுத்தம் செய்கிறீர்கள். (விக்கிரகத்தை சுட்டிக் காட்டி) அதோ பாருங்கள், என்ன மௌனமாய், சாந்தமே உருக்கொண்டு விளங்குகிருர் பக வான்.

ஏழைகள்: ஆண்டவனின் கோபத்தை சாந்தப்படுத்தவே நாங் கள் வந்திருக்கிறேம். அவரது கோபத்தினல் எங்கும் பஞ்சம். ஏற் பட்டுவிட்டது!

புரோகிதர்கள்: நீங்கள் ஏன் வெறுங்கையோடு வந்திருக்கிறீர் கள்?

ஏழைகள்: நாங்கள் துன்பம் நிறைந்த மனதுடன் வந்திருக்கி ரேம். கடவுள், காணிக்கை செலுத்துகிறவர்களின் குறைக ளையே கேட்பவர். நாங்கள் எங்கள் உயிரையே காணிக்கையாகக் கொண்டுவந்திருக்கிறேம். துன்பம் என்னும் புஷ்பத்தையும் கொண்டு வந்திருக்கிறேம்.

புரோகிதர்கள்: அவருக்கு இவை தேவையில்லை. பலருடைய துன்பத்தை அவர் பொருட்படுத்து பவரல்ல. சிலருடைய சந்தோ ஷமே அவக்குத் திருப்தியளிக்கக் கூடியது. போங்கள் வெளியே! எவ்வளவு தைரியத்தோடு நீங்கள் இப்படிப் பேசுகிறீர்கள். மரியாதை யாகத் திரும்பிவிடுங்கள்.

ஒருவர்: நான் ஒரு தேங்காய் கொண்டுவந்திருக்கிறேன்.

புரோகிதன்: அஃதென்ன அற் பம்.

ஓர் வயோதிகன்: நான் ஒரு ஆடு கொண்டுவந்திருக்கிறேன்.

கூட்டத்திலுள்ளவர்கள்: (கோபத் துடன்) அந்த ஆடு திருடியது, அவன் எஜமானனிடம் திருடியது.

வயோதிகன்: இல்லை! இல்லை! நான் அதை விலைக்கு வாங்கினேன்.

ஒருவன்: உனக்கு அவ்வளவு பணமேது?

வயோதிகன்: அது கடவுளுக் குத் தெரியும், என் மகளை விற்று அந்தப்பணத்திற்கே ஆடு வாங்கி னேன். ஆட்டைப் பலியிடுங்கள்,

(10-ம் பக்கம் பார்க்க)

"கண்ணகி"

சிங்கப்பூர் தோழர் மா. இரங்கசாமிக்கும், தோழியர் துளசியம்மாளுக்கும், 17-1-49-ல் பிறந்த பெண் குழந்தைக்கு "கண்ணகி" எனப் பெயரிடப்பட்டது. அதன் நினைவாக போர்வாளுக்கு ரூ. 2—0—0 நன்கொடையாக அளிக்கப்பட்டது. (வரப்பெற்றேம்.)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுவது என்பது சுலபத்தில் முடியாத காரியமாகும்'

சர்வ விஷயத்திலும் ஐக்கியபாவமான கூட்டுறவு முறையானது சாத்தியப்படுமா என்று ஒரு காலத்தில் கருதி இருந்தேன். ஆனால் எனது மேல்நாட்டு சுற்றுப்பிரயாண அனுபவங்களினால் அதிலும் குறிப்பாக ரஷ்யாவின் கூட்டுறவு முறைகளை நேரில் கவனித்துப் பார்க்க நேர்ந்தபின், கூட்டுறவு முறையைப் பற்றிய எனது ஆசை சாத்தியமாகக்கூடியதுதான் என்ற எண்ணம் மிகப் பலமாக உறுதிப்பட்டது.

என்னைப் பொறுத்தவரையில் என்னைப்பற்றி யார் என்ன நினைத்துக் கொண்டிருந்த போதிலும் எனது முடிவான இலட்சியம், அதாவது எனது எண்ணம், ஈடேறுமானால் அது உச்சஸ்தானம் பெற்ற உயரிய கூட்டுறவு வாழ்க்கை முறையாகத்தானிருக்கும் என்பது என் அபிப்பிராயம்.

கூட்டுறவு என்கிற கொள்கையானது உயரிய சரியான முறையில் நமமுடைய நாட்டில் ஏற்பட்டுப்போனால் ஜனசமூகமானது கவலையற்று, சஞ்சலமற்று, நாளைக்கு என் செய்வது என்று ஏங்கி தத்தளித்துக் கொண்டிருக்கும் நிலைமையற்று, நிம்மதியாக, சாந்தியாக திருப்தியுடன், குதூகலமாக வாழ வழி ஏற்பட்டுவிடும்.

நம்முடைய நாட்டில் ஏதாவது ஒரு சங்கம் ஏற்பட்டால் அதைப் பற்றி நம்முடைய மக்கள் என்ன கருதுகிறார்களென்றால் அதில் தங்களுக்கு எவ்வளவு தூரம் லாபமிருக்கிறதென்றும், அதைத் தங்கள் பெருமைக்கும், வாழ்வுக்கும் எவ்வளவு தூரம் (சுயநலத்திற்கு) பயன்படுத்திக் கொள்ளலாமென்றும்தான் கருதிக்கொண்டு அதில் தொடர்பு வைத்துக்கொள்ளுகிறார்களே ஒழிய அதனால் உலக நன்மைக்கு—மக்கட் சமுதாய மேம்பாட்டிற்குப் பாடுபட வேண்டுமென்பதைப்பற்றிய பொறுப்பையும், கவலையையும் அறவே விட்டுவிடுகின்றார்கள்.

அதுபோலவே நம்முடைய (கூட்டுறவு கோவாப்ரேடிவ்) ஸ்தாபனங்களிலும் இருந்து வருகிறது. அந்த ஸ்தாபனத்திலுள்ள மக்களுக்குள்ளாகக்கூட கூட்டுறவு உணர்ச்சி கிடையாதென்றே உறுதியாகச் சொல்லலாம். ஆகவே ஏதோ சிலர் தங்களுடைய நன்மைக்காகவும், பட்டம் பதவிகளுக்காகவும், கௌரவத்திற்காகவும் ஏதோ சிறிது தொடர்பு வைத்திருப்பதனால் மாத்திரம் என்ன பலன் ஏற்பட்டுவிடும்?

இந்த கூட்டுறவுக் கழகங்களால் உருப்படியாகப் பொதுமக்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டு இருக்கிறது? ஏதோ ஒரு சில சொற்பப் பேர்கள், தங்கள் சொந்தத்திற்கு எப்படிக் கடன் பெறலாமென்று பெருத்த பிரயாசை எடுத்துக் கொள்பவர்களே சில அனுகூலங்கள் அடைகிறார்கள். மற்றபடி இவர்களுக்கு ஷை ஸ்தாபனத்தைப் பற்றிய கவலையே இல்லை இன்றைய உலக எல்லா வாழ்க்கையும் இப்படித்தான் இருக்கிறது. கூட்டுறவு வாழ்க்கையென்றால் பிறருக்கு நாம் எவ்வாறு சகாயம் செய்வது, எவ்வாறு உதவுவது என்கிற விஷயங்களே நமது வாழ்க்கையின் முக்கிய இலட்சியமாய் இருக்கவேண்டும். வாழ்க்கை என்பது தனித்தனி மனிதனைப் பொறுத்த தத்துவம் என்பது கூடவே கூடாது.

சாதாரணமாக நாம் நம்மிடையே ஒருவரை புதிதாகக் கண்டால் அதாவது சந்தித்தால் அவருடைய ஸ்திதி என்னவென்றும், உத்தியோகம் என்னவென்றும் வினவ ஆசைப்படுகிறோம். அவர் ஒரு பெரிய உத்தியோகஸ்தராகவோ, பணக்காரராகவோ இருந்தால் அதற்காக ஒரு தனி மதிப்பும், ஒரு குமாஸ்தாவாகவோ, கூலியாகவோ இருந்தால், அதற்காக ஒரு தனி மதிப்பும்தான் கொடுக்கின்றோம். இதுதான் நம்முடைய நாட்டில் ஒரு மனிதனை மதிப்பதைப் பற்றிய முறையாகும். ஆனால் ரஷியாவிலோ இங்குள்ள இது போன்ற கேள்விகளை அங்கு யாரும் கேட்பதில்லை. அங்கு ஒருவருடைய உத்தியோக அந்தஸ்தைப்பற்றியோ, செல்வத்தைப்பற்றியோ சிறிதும் யோசிப்பதே இல்லை; விசாரிப்பதுமில்லை. அவற்றில் ஒருவருக்கொருவர் வித்தியாசமும் இருக்காது. ஆதலால் அங்கு அக்கேள்விக்கு இடமே இல்லை. மற்றபடி என்ன கேட்பார்கள் என்றால் ஒருவனைக் கண்டதும் அவன் சமுதாய சேவை என்ன செய்திருக்கிறான்—செய்கிறான் என்று மட்டுமேதான் பிரதானமாகக் கவனிப்பார்கள். அதுதான் அங்கு அவனுடைய பெருமையைக் காட்டுவதாகும். அங்கு உத்தியோகத்தைப்பற்றிய பேச்சோ, வருமானமோ, மேல் கீழ் வரும்படி என்பது போன்ற பேச்சோ, எங்கும் எவ்வித வடிவத்திலும் கிடையாது. அங்கு எங்கும் யாவரும் சமுதாய வேலை செய்வோரேயாவர்.

நான் ரஷியாவில் இருந்த காலத்தில் ஒரு வழக்கு மன்றத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லப்பட்டேன். அங்கு ஒரு குற்றவாளியை விசாரிக்கக் கண்டேன். அவன் ஒரு விசேஷ நாளில் குடித்து வெறியனாகி கலகம் செய்தான் என்பதாகக் குற்றவாளியாக்கப்பட்டவன். இவனை அந்த விசாரணை ஸ்தலத்தில் என்ன கேள்வி கேட்டார்கள் என்றால் உன்னுடைய சமுதாய ஊழிய வேலை என்ன என்பதேயாகும். அவன் அதற்கு எனக்கு சமுதாய வேலை இல்லை என்றான். இதைக் கேட்டதும் நீதிபதியும், ஜூரியான ஒரு பெண்ணும் "உனக்கு சமுதாய வேலையில்லாமல் போய்விட்டது என்கிறாயே, வெட்கமில்லையா? உன்னை உலகுக்குப் பயன்படுத்திக் கொள்ள வகையற்றவனாக இருக்கிறேன் என்று சொல்லுவது அவமானகரமானதாகத் தோன்றவில்லையா?" என்று கடிந்தார். அதற்கு அவன், "எல்லா சோஷியல் சர்விசையும் சிறு பிள்ளைகளாகிய கம்சமால் கூட்டத்தார் எடுத்துக் கொள்கிறார்கள், நான் என்ன செய்வது?" என்றான். அந்தம்மாள் வெட்கம் வெட்கம் என்றாள். இவைகளைக் கேட்ட பிறகுதான் சோஷியல் சர்வீஸ் என்பதைப்பற்றி அதிகம் அறிய ஆசை கொண்டேன். அதன் பயனாய் ரஷியர்கள் சமூக ஊழியம் செய்வது தான் தங்கள் வாழ்க்கையின் மேலான லக்ஷியம் என்பதை முதலாகவும், அடுத்தபடி கூட்டுறவு வாழ்க்கையே மேலான வாழ்க்கை என்பதாகவும் கருதி இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

ரஷ்யர்களுடைய வாழ்க்கையானது உற்சாகமாகவும் ச தோஷமாகவும் இருப்பதற்குக் கா

(9-ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞான உலகின் அதிசயங்கள்!

[விஞ்ஞானம் மனித சமுதாயத்திற்கு அளித்துள்ள வியத்தகு கருவிகளில் தலைசிறந்த ஒன்று ரேடியோ. ரேடியோ சக்தி எதிர்காலத்தில் எவ்வண்ணம் எண்ணற்ற அற்புதங்களைச் செய்ய இருக்கிறது என்பதை இக் கட்டுரை சுருக்கமாகவும் தெளிவாகவும் விளக்குகிறது "நம்மாலே என்ன ஆகும், எல்லாம் அவன் விட்ட வழி!" என்று வேதாந்தப் பேசும் வீணர்கள் உள்ளத்திற்கு ஒரு சவுக்கடி, இக் கட்டுரை.]

இந்த நூற்றுண்டின் 'மாந்திரீகன்' என்று கூறத்தக்கது ரேடியோதான்; இது ரேடியோ யுகம் என்று கூறினும் பொருந்தும். சென்ற ஐம்பது ஆண்டுகாலத்தில் வர்த்தகம், கைத்தொழில் தொடர்பான சமூகத்தின் ஒவ்வொரு பகுதியும் தலைகீழ் மாறுதல் அடைந்திருக்கிறது. இந்த மாற்றத்திற்கு ரேடியோ சம்பந்தப்பட்ட புதுமைகள்தான் மற்றெவற்றையும்விட அதிக தூரம் காரணமாயிருந்து வந்திருக்கின்றன.

ஒரு சிறு குமிழைத் திருப்புகின்றோம்; லட்சக்கணக்கான மைல்களுக்கப்பால் நடப்பவை நம் காதில் நன்கு விழுகின்றன. அதில் தாமதம் எதுவும் ஏற்படுவதில்லை. ஏதோ கரகரப்பு சப்தம் கேட்பதாகப் பலர் குறை சொல்வதுண்டு; ஆனால் எதிர்காலத்தில் இந்த ரேடியோ நமக்கு என்னென்ன புதுமைகளை அளிக்கப் போகின்றது என்பதை இவர்கள் உணர்வதில்லை.

17-வது நூற்றுண்டில்தான் ரேடியோவைப் பற்றிய நுணுக்கமான ஆராய்ச்சி ஆரம்பமானது. அதுமுதல், மூளை சக்தியுள்ள, மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் ஏதோ ஒரு முறையில் இந்த அற்புத சக்தியின் ஆராய்ச்சி விஷயத்தில் ஈடுபட்டு தாங்கள் கண்டுபிடித்தவற்றை உலகுக்கு அளித்திருக்கிறார்கள். விஞ்ஞான ஆராய்ச்சியில் ரேடியோ சக்தியைப் போன்று வேறு எதுவும் அத்தனை பலன்களை அளித்ததுமில்லை, அளிக்கப்போவதுமில்லை.

ரேடியோவின் பயன் எல்லையற்றுப் போகும்

பத்துப் பன்னிரண்டு புதுமைகளைச் சுற்றியே எதிர்கால உலகம் அமையப் போவதாகத் தெரிகிறது. பன்னிரண்டு எனும்போது அத்தனை பெரியதாகத் தோன்றவில்லை; ஏனெனில் ஆண்டுதோறும் சுமார் இரண்டரை லட்சம் புதுமைகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொன்றும் வாழ்க்கையின் ஒரு புது அம்சத்தை உற்பத்தி செய்யக் கூடியதேயாகும்.

மனிதனுடைய உழைப்பில் ரேடியோ சக்தி பெரிய மாற்றத்தை உண்டுபண்ணி விட்டது; அது மட்டுமல்ல; அவனது வாழ்க்கை நிலையையே அடியோடு மாற்றி விட்டது. அவனது உடல் உரத்தைப் பாதுகாக்கவும், ஓய்வு நேரத்தைச் செலவிடவும் அது பெருந்துணை புரிகின்றது.

இன்று ரேடியோ நமக்கு ஒரு பொழுது போக்குக்குரிய கருவியாகத் தோன்றுகிறது. அதனுடைய பண்பும் பயனும் விரிவடையும்போது, செட்டுகள் அபிவிருத்தி யடைந்து சிக்கல்கள் நீங்கும்போது, தினசரி வாழ்க்கையில் அதன் உபயோகம் எல்லையற்றுப போய்விடும்.

புரபஸர் கொவாரிஸிக் என்பவர், ஆஸ்திரேலிய பௌதிக சங்கத்தின் முன்னிலையில், ரேடியோ மூலம் எப்படி சமைப்பது என்பதைச் செய்து காட்டினார். ஒரு இறைச்சித் துண்டைத் தண்ணீரில் போட்டார். தூரத்திலிருந்து ரேடியோ அலைகள் அதன்மீது செலுத்தப்பட்டன, ஒரு சில நிமிஷத்தில் தண்ணீர் முன்னிருந்த படியே சூடாக ஆகாமலிருக்க இறைச்சி மட்டும் வெந்துபோயிற்று. அதேமாதிரி ரொட்டி பொரித்தும், தேத்தண்ணீர் தயாரித்தும் காண்பித்தார்.

இன்று ரேடியோ குழந்தைப் பருவத்திலேயே இருக்கிறது. நாளையதினம் அதன் விலை ஒவ்வொரு வீட்டிலும் ஒரு [illegible] இருக்கத்தக்க [illegible] விடலாம். மேலும் [illegible]ன்றைய தினம் ரேடியோ சக்தியா[illegible] இசைப்பாட்டுகளை கேட்பதற்காகவே பெரிதும் பயன்படுகிறது. ஆனால் இனி வருங்காலத்தில் மனிதர்களின் எத்தனையோ தேவைகளை அது பூர்த்தி செய்துவிடும். குறிப்பாக வீட்டுவேலை கஷ்டத்தை அது மிகுதியும் குறைத்துவிடும் என்பதில் சந்தேகமில்லை. கரியடுப்பும், அதனால் உண்டாகும் அழுக்கும் கஷ்டமும் ஒழிந்துவிடும். குளிர் காலத்தில் உணவுப் பொருள்கள் கெடாமல் வைத்திருக்கும் பிரச்னையும் இதன் மூலம் எளிதாகத் தீர்ந்துவிடும்.

கம்பியில்லாமல் மின்சார விளக்குகள் போடலாம்

பூமிக்குள் கீழே போடப்படும் மின்சாரக் கம்பிகளின் உதவியில்லாமலே இனி ரேடியோ சக்திமூலம் வீட்டில் மின்சார விளக்குகள் போடலாம். அதே சக்தி வீட்டிலும் அலுவலகத்திலும் தொழிற்சாலையிலும் தட்ப வெப்ப நிலைமையை நம்முடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு ஒரே படித்தாக இருக்கச் செய்யும். அதாவது வேனிற் காலத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

வேலூரில் அண்ணு!

13—2—49 ஞாயிறு

காலை 9-மணி: கஸ்பா திராவிடர் கழக ஆண்டு விழா. A. P. ஜனார்த்தனம் M. A. அவர்களின் தலைமை. புலவர் கோவிந்தன் சொற்பொழிவு.

மாலை 6-மணி: கோட்டை வெளியில் பொதுக்கூட்டம்.

இரண்டு கூட்டங்களிலும் தளபதி அண்ணு அவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

போர்வாள்

12—2—49 சனிக்கிழமை

கனவு பலித்ததம்மா!

★

கனவு பலித்தது! தூய கனவு பலித்தது! வீரர் சிதம்பரனார் கண்ட இன்பக்கனவு பலித்தது! நாற்பதாண்டுகளுக்கு முன்னால் அஞ்சாத நெஞ்சு படைத்த அந்த அறப்போர்த் தளபதி கண்ட புனிதக் கனவு பலித்தது! தமிழ் மக்கள் உள்ளத்தெல்லாம் நிழலாடிக் கொண்டிருந்த அரிய கனவு பலித்தது—தமிழ்க் கனவு பலித்தது! தமிழ்நாட்டுக் கடலிலே தமிழர் கப்பல் கம்பீரமாக வலம்வரத் தொடங்கிவிட்டது—தமிழர் நெஞ்சில் எல்லாம் இன்பம் இன்னிசைக் கீதம் இசைக்கத் தொடங்கிவிட்டது—மகிழ்ச்சி, எங்கணும் தாண்டவமாடத் தொடங்கிவிட்டது! களிப்பு, தமிழகத்தைத் தழுவி மகிழத் தொடங்கிவிட்டது!

கனவு பலித்துவிட்டது! தமிழ்க் கடலிலே தமிழர் கப்பல் மிதக்கவேண்டும் என்பது தமிழகத்தின் பழம்பெருந் தலைவர் சிதம்பரனாரின் கனவு—அந்தக் கனவு பலித்துவிட்டது! கலம், கடலிலே மிதக்கத் தொடங்கிவிட்டது! தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கத் தொடங்கிவிட்டது!

வெள்ளை ஏகாதிபத்தியத்தின் உறுமல் ஓர் புறம், சீமைத் துரைகளின் செருக்கு மற்றோர் புறம், இந்திய மக்களின் அலட்சியம் ஓர் புறம், பணம் படைத்த சீமான்களின் சிடுசிடுப்பும் ஒத்துழையாமையும் இன்னோர் புறம்—இவ்வளவுக்கும் இடையே, தன்னந்தனியே நின்று, வெள்ளைக் கப்பல் கம்பெனியின் பலத்த போட்டிக்கெதிரே, அடிமை இந்தியாவில் சுதந்தரக் கப்பலை ஓட்டிய பெருமை சிதம்பரனார் ஒருவருக்கே உண்டு. சர்க்கார் சீறிற்று—அவர் சித்தம் சிதையவில்லை. சிறை அவரைக்கூவி அழைத்தது—வீரர், மனம் கலங்கவில்லை! ஜன்ம தண்டனை அவரை அள்ளி விழுங்கிற்று—மன்னன், நடுங்கவில்லை! தன் மெல்லிய கரத்தாலே செக்கை இழுக்க வேண்டிய 'துர்ப்பாக்கியமும்' சணல் இயந்திரம் ஓட்ட வேண்டிய கொடுமையும் அவருக்கு நேரிட்டன— தீரர், கண்ணீர் சிந்தவில்லை! நெஞ்சில் ஈரமற்ற வெள்ளை ஏகாதிபத்தியம் அந்த தமிழர் குலத்தின் தனிப்பெருந் தலைவனை, காலிலும் கையிலும் விலங்கைப் பூட்டி, காராக்கிரகத்தில் கடுங்காவலில் தள்ளி, நெஞ்சை நடுங்க வைக்கும் கொடுமைக்கெல்லாம் உள்ளாக்கிற்று—என்றாலும் எஃகு உள்ளம் படைத்த சிதம்பரம் இம்மியளவும் தன் இலட்சியப் பாதையிலிருந்து வழுவவில்லை; புரட்சிக் கொடி உயர்த்தும் புனிதப் பணியிலிருந்து மாறவில்லை. வாழ்ந்த நாள் எல்லாம் நாட்டுப் பணியே ஆற்றினார்; அந்தப் பணி ஆற்றிய வண்ணமேதான் இறந்தார்; இறந்தும் இறவாப் புகழ் அடைந்தார்.

தமிழகத்திலே—ஏன்—இந்தியாவிலேயே ஒரே ஒரு சிதம்பரனார்தான் தோன்றினார்—ஒரே ஒரு சிதம்பரனார்தான் தோன்றமுடியும். சிதம்பரனார் மஹரிஷி அல்ல; மஹான் அல்ல; முனிபுங்கவர் அல்ல; தவஞான சிரேஷ்டர் அல்ல; திரிலோக சஞ்சார திவ்ய புருஷரல்ல—தீர்த்த மகிமையோ மூர்த்தி மகிமையோ இது எனக் காட்டவந்த அவதார மூர்த்தி அல்ல—அத்தகையவர்கள் அடிக்கடி "தோன்று"வார்கள்!—ஆனால், அவர், உள்ளத்தில் எண்ணியதை எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாது நடத்திக் காட்டிய திண்ணியர்; திண்ணிய நெஞ்சு படைத்தவர்—அத்தகைய அடலேறுகள் அடிக்கடி தோன்றுவதில்லை.

சிதம்பரனார் ஒருவர், ஆனால் ஒப்பற்றவர்! தமிழர் குலத்தின் தனி விளக்கு, அந்த திண்தோள் மறவர்! அஞ்சாமையின் சின்னம், வீரத்தின் உருவம், செந்தமிழின் இன்பம் அச்செழுந்தமிழர்!

சிதம்பரனார் என்றால் புரட்சி என்று பொருள்; புதுவாழ்வு என்று பொருள்; வருங்காலத் தமிழர்க்கோர் கலங்கரை விளக்கம் என்று பொருள். சிதம்பரனார் என்றால் புதிய தமிழகம் என்று அர்த்தம். புதிய தமிழகம் என்றால் சிதம்பரனார் என்று அர்த்தம். ஆகவேதான் சிதம்பரனார் பெயராலே கடலிலே இக்கிழமை முதல், கப்பல் ஓடுகிறது என்பதைக் கேட்டதும், தமிழர், இவ்வளவு களிப்படைகின்றனர்!

"கப்பலோட்டிய தமிழன்" என்னும் சிறப்புப் பெயர் படைத்த சிங்கத் தமிழனின் பெயரைச் சூட்டுவதைவிட தமிழ்நாட்டுக் கப்பலுக்கு அதி

எம் தூத்துக்குடியிலிருந்து புறப்படும் கப்பலுக்கு வேறு என்ன பெயர் சூட்டமுடியும்? வேறு வுன்ன பெயர் சூட்டினல் பொருந்தும்?

"வ. உ. சிதம்பரம்", இனி, கடலிலே, சோழர் கடற் படையை, பாண்டியர் கலங்களை, மூவேந்தர் ஆட்சியை, தமிழர் பெரு வீரத்தை, திராவிடர் மாட்சியை நினைப்பூட்டிய வண்ணம், கம்பீரமாக, உலவும். தமிழர் அதைக் காணும்போது, அந்த அழகிய காட்சியை எண்ணிப் பார்க்கும்போது, களிப்பு மட்டுமா அடைவர்! புதிய தமிழகத்தை, இன்பத் திராவிடத்தை, தம் இலட்சிய பூமியை, உடனே பெற்ருக வேண்டும், அதற்காக எத் தகைய தியாகமும் செய்யத் தயாராகவேண்டும் என்ற உள்ள உறுதியும் தியாக உணர்ச்சியும் அல்லவா அவர்கள்பால் பொங்கித் ததும்பும்!

ஜல உஷா! இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு ஓட்டப்பட்ட முதல் இந்தியக் கப்பலின் பெயர் இது! **ஜல ஜவஹர்!**—அடுத்தாற்போல் ஓட்டப் பட்ட கப்பலின் பெயர்! **ஜல பிரபா**—மூன்ருவது கப்பல், இது! **டில்லி**—நான்காவது கப்பல்! இவற்றிலே முதல் மூன்று கப்பல்களும் வால் சந்த் ஹீராசந்த் என்ற வடநாட்டு முதலாளி யினுடையவை. கடைசிக் கப்பல் இந்திய சர்க் காருடையது. விடுதலை பெற்ற இந்தியாவில் விடு தலை சர்க்காரால் ஓட்டப்படும் முதல் கப்பல் **சிதம்பரனர்** என்ற பெயரைத்தான் கொண்டதாக இருக்கவேண்டும்—அதுதான் முறை! அடிமை இந்தியாவில் ஆளவந்தார்களின் ஆர்ப்பாட்டத் திற்கு அஞ்சாமல் கப்பல் ஓட்டியவர் சிதம்பரனர் ஒருவரேதான்! வடநாட்டு வால்சந்த் ஹீராசந்த் கம்பெனியாருக்கு கொஞ்சம் பெருந்தன்மை சிறி தளவு நேர்மைப் பண்பு இவை இரண்டும் இருந் திருந்தால் தாங்கள் ஓட்டிய முதல் கப்பலுக்கு சிதம்பரனர் என்றுதான் பெயர் சூட்டியிருப்பர்! ஆனல் சூட்டவில்லை—காரணம் வெளிப்படை—சிதம்பரனர் தமிழர்! தென்னாட்டவர்! வால்சந்த் ஹீராசந்துகள் மறைந்த மாவீரர் சிதம்பரனருக்கு மரியாதை செய்யத் தவறினர் என்ருலும் இந்திய சர்க்காரேனும் தங்கள் சொந்தக்கப்பலுக்கேனும் அவர் பெயரைச் சூட்டியிருக்க வேண்டும்—இல்லை! அவர்களும் அந்தப் "பாபகாரியத்"தைச் செய்தனரில்லை! தங்கள் கப்பலை 'டில்லி' என்று தம் மனம் குளிர அழைத்துக் கொண்ட னர்! சிதம்பரனரின் தியாகத்தை மறந்தனர்!

அவர்கள் மறந்தனர் ஆனல் மறக்கவில்லை தூத்துக்குடி வணிகர்கள்! தூத்துக்குடி வணிகர் கள் தங்கள் சொந்த முயற்சியால் தாங்கள் ஓட் டும் தங்கள் கப்பலுக்கு—சர்க்கார் கப்பலுக் கல்ல!—வ. உ. சிதம்பரம் என்னும் பெயர் சூட் டவும் தங்கள் கப்பல் கம்பெனிக்கே சிதம் பரனர் கம்பெனி என்று பெயர் வைக்கவும் மகிழ்ச்சியுடன் முன்வந்தனர்—அவர்கள் செயல் தமிழர் அனைவராலும் பாராட்டப்படுகிறது. நாமும் நம் பாராட்டுதலை, "**வ. உ. சிதம்பரனர்**" வெள்ளோட்ட விழா நிகழும் இந்த நல்ல தரு ணத்தில், அந்த தூத்துக்குடி தோழர்கட்குத் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் விழைகிறோம்—இனியேனும் இந்திய சர்க்கார் தங்கள் கப்பல் ஒன்றிற்கு வ. உ. சி. என்று பெயர் சூட்டி தங் கள் பெயருக்கு வந்துள்ள மாசைத் துடைத்துக் கொள்ளட்டும்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ல் இறங்கவேண்டும். நமது சரீ ...தில் கஷ்டம் ஏற்பட்டால் நமக் ...கன்னவென்று இருப்போமா? ...துபோல் நமது பொது உணர்ச்சி ...ர் இருக்கவேண்டும். சிப்பியா ...து தயாராகத் திறந்திருக்கும். ...ழை ஜலம் விழுந்தால் உடனே ...த்தாகிறது. அதுபோல்தான் ...ம் நமது உணர்ச்சிகளைப் பக்கு ...படுத்தி சரிப்படுத்தி வைத்துக் ...ாண்டு தயாராகவே இருக்க ...ண்டும், அப்பொழுது கண்டிப் ...க பலன் ஏற்பட்டுவிடும். நம் ...டைய அபிப்பிராயந்தான் மக்கட் ...க அபிப்பிராயம் என்று தன் நம்பிக்கையுடன் நாம் வேலை செய்யவேண்டும். நமது உடலில் தனித்தனித் தத்துவ இரத்தத்தை எடுத்துவிட்டுக் கூட்டுறவுத் தன்மை என்ற இரத்தத்தைப் பாய்ச்சுதல் வேண்டும். இது நம்மால் முடியுமா என்று இருக்கக்கூடாது. கண்டிப் பாய் இது முடியக்கூடியதே.

எப்படி, காய்ந்த தீய்ந்த, சருகில் அதிவேகமாய் நெருப்புத் தீப்பற்றிக் கொள்ளுகிறதோ அப்படியே தான் அக்டோபர் புரட்சி காரணமாக ரஷ்யாவில் மதம் ஒழிந்து, கடவுள் மாய்ந்து, அரசர்கள் மண்ணுங் கட்டிகளாகி, செல்வர்கள் பனிக்கட்டிகளாகி, மழைபெய்தா லும், வெய்யில் அடித்தாலும் இவை கள் எல்லாம் கெடுவதுபோல், கெட்டு ஒழிந்து, அங்குள்ள 16 கோடி மக்களும் கூட்டுறவு வாழ்க் கைக்காரராகி விட்டனர் என்பதை நீங்கள் உள்ளத்தில் நன்கு பதிய வைத்துக்கொண்டு, இந் நாட்டுக் கொடுமை, பஞ்சம், அநீதி ஆகிய வற்றின் ஒழிப்புக்குத் தைரியங் கொண்டு கூட்டுறவு மூலம் போராடி உழையுங்கள். உங்கள் உணர்ச்சிகளும் இவைகளுக்கு எப் பொழுதும் அனுகூலமாகவே இருக் கட்டும். நீங்கள் வெற்றி அடை வது நிச்சயம்.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மலைப் பிரதேசங்கட்குக் குளிரை நாடிச் செல்லாமல் வீட்டுக்குள்ளேயே குளிரைத் தருவித்துக் கொள்ள முடியும்; அதே போன்று குளிர்காலத்தில் வெந்நீர்க் குழாய் முதலியவற்றின் உதவியின்றி ரேடியோ அலைகள் மூலம் வேண்டிய அளவு வெப்பத்தை உற்பத்தி செய்து கொள்ளலாம். பகலிலும் இரவிலும் நமக்கு வேண்டிய இந்த ஊழியங்கள் எதுவும் தானே நடைபெறும்படி செய்யலாம்.

நமது நாகரிகத்தின் அடிப்படையாக இருப்பது உழவுத்தொழிலே. மக்கள் தொகையில் நூற்றுக்கு 70 பேர் அதில் ஈடுபட்டிருக்கிறார்கள். உழவுக்கு உயிர் நாடி சூரிய வெளிச்சம். தண்ணீரையும் கரி மலவாயுவையும் உணவாக்க அதுவே உதவுகின்றது. ஆனால், போதிய மழையில்லாததாலும் புழுப் பூச்சிகளாலும் நமக்கு எத்தனை கஷ்ட நஷ்டங்கள் நேரிடுகின்றன? இந்தத் தடைகளையெல்லாம் ரேடியோ சக்தி வென்றுவிட்டது. ஹார்ட் என்பவர் கண்டு பிடித்த யந்திரத்தின் மூலம் ரேடியோ அலைகளைக் கொண்டு விதைகளை முளைக்கச் செய்யலாம். லெஸஸ்டரில் விஞ்ஞான பண்டிதராயிருக்கும் புரபஸர் R. H. சாட்பீல்டு என்பவர், உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் ஒளி அலைகளை வெளியிடுவதாயும், அந்த ஒளி அலைகளை அதே அளவுள்ள வேறு ஒளி அலைகள் மூலம் கிரகிக்கச் செய்வதால், அந்தப் பிராணியை உடனேயே கொல்ல முடியுமென்றும் கண்டு பிடித்துள்ளார். இந்த மரண கிரணங்களைக் கொண்டு, தோட்டங்களையும் பயிர்களையும் அழிக்கும் பூச்சிகளையும் எலிகளையும் கொன்றுவிடுகின்றனர், எந்த விதக் கம்பியுமின்றி நீண்ட தூரத்துக்கு ரேடியோ சக்தியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்ப முடியும்; இச் சக்தியை மீண்டும் மின்சார சக்தியாக மாற்றலாம். இதைக் கொண்டு தண்ணீர் பம்புகளை இயக்கி, வயல்களுக்கு நீர்ப் பாய்ச்சலாம். மின்சாரக் கலப்பைகளை உழச் செய்யலாம். உழவு வேலை எளிதில் நடைபெறும். ரேடியோ சக்தியின்றி இத்தகு அற்புதங்களை நிகழ்த்துதல் முடியாது.

இரவில் விளக்கில்லாமல் கார் ஓட்டலாம்

இந்த ஆராய்ச்சிகள் விஞ்ஞான ஆய்வுகூடத்தை விட்டு வெளியேறி கலிபோர்னியாவிலுள்ள 6 பெரிய பழத் தோட்டங்களில் பெருந்தொண்டு புரியத்தொடங்கி விட்டன, பருவகாலங்களில் நல்ல பலனும் கிடைத்து வருகின்றது.

இனி வரக்கூடிய கார்கள் மின்சாரசக்தி மூலமே ஓட்டப்படலாம். ரேடியோ சக்தியைக் கிரகித்து ஓடக்கூடிய மின்சார இயந்திரங்கள் இணைக்கப்படும். சான்ரூபி ரயில் பாதையில், இம்முறையைப் பரீட்சார்த்தமாகக் கையாண்டு பார்க்கிறார்கள்.

இனி விளக்கில்லாமலே இரவில் கார் ஓட்டலாம். மோட்டார் பாதைகளெல்லாம் கண்களைக் கூச வைக்காத ரேடியோ விளக்குகள் மூலம் பிரகாசிக்கச் செய்யப்படும். வண்டிகள் போக்குவரத்து, ஆள் போக்குவரத்து எல்லாம் ரேடியோ சக்தி மூலமே ஒழுங்கு படுத்தப்படும். ரயில்வே ஸ்டேஷன்களில் இப்போதுபோல விளக்குகளால் அல்லாமல் எதிர்காலத்தில் ரேடியோ யந்திரங்கள் மூலம் டிரைவர்கட்கும் மற்றையோர்கட்கும் வழி காண்பிக்கப்படும். வட மெல்போர்ன் கிராவிட்டேஷன் யார்டில் இம்முறை திருப்திகரமாகக் கையாளப்படுகிறது.

இவையெல்லாம் கேட்பதற்குக் கட்டுக்கதை போலவே தோன்றும்; ஆனால் ரேடியோ மூலம் செய்தி அறிவிக்கும் முறை வெற்றியளித்து விட்டது. ரேடியோவின் "தந்தை" யான மார்க்கோனியை அதன் எதிர்காலத்தைப்பற்றிக் கேட்ட போது "ரேடியோ என்ன செய்யும் என்பதல்ல முக்கியம்; அது செய்யமுடியாத காரியம் என்ன இருக்கமுடியும் என்பதே பிரச்சினை" என்று பதிலளித்தாராம்.

நோயைக் குணப்படுத்தவும் ரேடியோவால் முடியும்!

நோய்களைக் குணப்படுத்துவதற்கும் துன்பத்தைத் துடைப்பதற்கும் ரேடியோவை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆராய்ச்சியில் வைத்தியர்கள் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறார்கள். கன்னப்புத்து நோயை ரேடியோ அலைகள் மூலம் குணப்படுத்தக் கூடுமென்று பிரிட்டிஷ் நிபுணர் புரொபஸர் ஹாப்வுட் 1933-ல் தெரிவித்தார். சிற்றலைகளின் வெப்பத்திற்குச் சிகிச்சை செய்யும் சக்தியிருப்பதாக அவர் கண்டு பிடித்துள்ளனர். கீல்வாதம் முதலிய பல நோய்களைக் குணப்படுத்த ஐரோப்பாவிலுள்ள பலவேறு மருத்தகங்களிலும் ரேடியோ இணைத்த யந்திரங்கள் வெற்றிகரமாக உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன, தூக்கம் வராமல் கஷ்டப்படும் நோயாளிகளிலே நூற்றுக்கு 60 பேரைத் தாம் கண்டுபிடித்த யந்திரத்தின் மூலம் குணப்படுத்தி விட்டதாக புரபஸர் ஜே. பி. மார்கன் என்ற அமெரிக்கர் தெரிவித்துள்ளார். இந்த யந்திரத்தின் உதவியால் ஒருவர் தமக்குத் தூக்கத்தை வருவித்துக் கொள்ளலாம். உடம்பில் உண்டாகும் சிறு கட்டிகளை ஆபரேஷனில்லாமலே ரேடியோ அலைகள் மூலம் குணப்படுத்திவிடும் காலமும் விரைவில் ஏற்படலாம். ஒரு இடத்தில் நடைபெறும் கஷ்டமான ஆபரேஷனை, உலகின் மறு கோடியிலிருக்கும் நிபுணர் டெலிவிஷன் மூலம் மேற்பார்வை செய்யும் அரியவாய்ப்பும்கூட ரேடியோவின் உதவியால் ஏற்படக்கூடும்.

(11-ம் பக்கம் பார்க்க)

திருமணம்

13-2-49 ஞாயிறு காலை 7½ மணிக்கு 77, சர்ஞடிக் மில் லைன் பெரம்பூரில் ராஜகோபாலன்-வள்ளி திருமணம் தோழியர் குஞ்சிதம் B. A. L. T. தலைமையில் நிகழும். பெரியார் ஈ. வே. ரா. தோழர் குருசாமி B. A. பேசுவர். மாலை 5½ மணிக்கு பாராட்டுக் கூட்டம் தலைவர்: க. அன்பழகன். சத்தி வாணிமுத்து, அ. மு. பரமசிவானந்தம் B. O. L, காஞ்சி மணிமொழி யார் ஆகியோர் பேசுவர்.

க. சொக்கலிங்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் அவர்கள் பொதுத் தொண்டு ஆற்றவும் கூட்டுறவு வாழ்க்கையை நடத்தவும் முனைந்து நிற்பதேயாகும். அவர்கள் வாழ்க்கையில் மேற்போட்டுக் கொள்ளும் இந்த வேலையானது மனித சமூகத்துக்கு கவலை, துன்பம், மனச்சோர்வு என்பவைகளே இல்லாமல் செய்து விடுகிறது. அங்குள்ள மக்களின் எண்ணமெல்லாம் பிறருக்கு நாம் எவ்வளவு தூரம் நன்மை செய்யலாம் என்பதேயாகும். இந்த நோக்கமில்லாத மனிதனை மனிதனாகவே அவர்கள் கருதுவதில்லை.

நம்முடைய நாட்டில் உத்தியோகத்தின் பேராலும் மற்ற பதவிகளின் பேராலும் மாதம் 1-க்கு 1000, 2000, 5000, 10000 ரூபாய்கள் கொள்ளை கொள்வது போன்ற கொடுமைகள் ரஷ்யாவில் கிடையாது. அங்குள்ளவர்களுக்கு தனக்கு வேண்டிய அளவுக்கு மேல் வரும்படி-லஞ்சம்-லாவணம் என்பன போன்றவைகளே அடியோடு கிடையாது. அங்கு தனிப்பட்டவர்களுக்குள் ரூபாய் 10, 5 கூட கடன் கொடுக்கும் முறையே கிடையாது. அது குற்றமான முறையே யாகும். எல்லாம் கூட்டுறவின் மூலம்தான் நடைபெற வேண்டும்.

நம்முடைய நாட்டில் அளவுக்கு மீறிய செல்வச் செருக்கு கொண்டவர்களையும், கல்நெஞ்சம் படைத்த கனத்த முதலாளிமார்களையும் ஒரு பக்கத்தில் வெகு பந்தோபஸ்தாக வைத்துக்கொண்டிருக்கின்றோம். மற்றொரு பக்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டக்காரர்களையும், பிச்சைக்காரர்களையும் வைத்துக் கொண்டிருக்கிறோம். இவைகளெல்லாம் ஏன் இப்படி இருக்கிறது? இது போன்ற நிலைமை ரஷ்யாவில் இல்லையே! சுயநல ஆதிக்கக்காரனுக்கும் ஆதிக்கத்திற்கும் கொஞ்சமாவது இடமிருக்கிறவரையிலும் தொல்லைப்படுகிறவர்களும், தொல்லையும், தரித்திரமும், ஏழ்மையும் இந்த நாட்டில் இருக்கத்தான் செய்யும்.

நம்முடைய நாட்டில் அடிப்படையான மாறுதல் செய்யாவிட்டால் கூடிய சீக்கிரத்தில் நாம் என்ன கதிக்கு ஆளாக வேண்டி வரும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

நாம் செலவழிப்பதிலும் வகை தொகையற்ற முறையில் வீண் செலவு செய்து வருகின்றோம். நமது வாழ்க்கையைக் கூட்டுறவு முறையில் நடத்தினால் இன்றைய நமது செலவில் எட்டில் ஒரு பாகம் தான் செலவு ஏற்படும். பாக்கி இன்னும் 8-பேருக்கு உதவும்.

உதாரணமாக ரஷ்யர்களின் சாப்பாட்டு முறையைக் கவனியுங்கள். அங்கு சாப்பாடும் கூட்டுறவு முறைதான். அங்கு ஒரு இடத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு நாற்பதினாயிரம் பேர்கள் சாப்பிடுமிடத்தைக் கண்ணுற்றேன். ஆனால் இங்குள்ள நிலைமை என்ன? ஒரு வீட்டில் சமையல் செய்வதென்றால் தேவைக்குமேல் அதிகமாய்த்தான் போட்டுச் சமைக்கிறார்கள். 4-5-பேர்கள் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஒரு பெண்ணை கண்டிப்பாகச் சமையலுக்கென்று ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு குடும்ப சமையலுக்காக என்று ஒரு தனி அறையும், பாக்கி வசதிகளுக்கென்று ஏராளமான அறைகளும் இடமும் ஒதுக்கி வைத்துக்கொண்டு எவ்வளவோ அக்கிரமமான தீங்குகளை வசதியற்ற எளியவர்களுக்குக்கூட உண்டாக்கிக் கொண்டிருக்கிறோம்.

ரஷியாவிலுள்ள மேற்சொன்ன பொது சமையல் சாலையில் 970 பேர்கள் தான் சமையல் வேலையிலீடுபட்டிருக்கிறார்கள் என்று நான் கணக்குக் கேட்டுத் தெரிந்தேன். நம்முடைய நாட்டிலோ 4-பேர்களுக்கு ஒரு பெண் வீதம் சமையலுக்கு எத்தனை ஆயிரம் பெண்களை ஒதுக்கித் தள்ளிக் கொடுமைக்காளாக்கி வருகிறோம் என்பதையோசித்துப்பார்க்கும்படி வேண்டுகிறேன். நம்முடைய சமையலைப்பற்றி ஏதாவது பந்தோபஸ்து உண்டா? சமயலறையையும் சாப்பாட்டுச் சாமான்களையும் சமைத்த பிறகும் ரஷ்யாவில் தினம் டாக்டர் சரியானபடி பரிசோதனை செய்கிறார். ஒரு பெரிய எம். டி. டாக்டர் பரீக்ஷைக்கென்றே ஒவ்வொரு கூட்டுறவு சமையலுக்கும் உண்டு. இங்கு நாம் என்ன செய்கிறோம்? சல்லீசான சரக்குகளை வாங்கிப் போட்டு வெந்தும் வேகாமலும் அவித்துத் தின்று, சாப்பாட்டின் காரணமாகவே பெரும்பாலும் நோய் அடைகின்றோம். ரஷ்ய நாட்டு வாழ்க்கையில் எவ்வளவு கஷ்டக் குறைவு, அனுகூலம், பணம் மிச்சம், சுகாதாரம், சௌக்கியம் ஆகியவைகள் கவனிக்கப்படுகிறதென்பதை யோசியுங்கள். அங்கு ஒரு ரொட்டிக்கிடங்கில் நாள் ஒன்றுக்கு 250-டன் ரொட்டிகள் ஒரே சாலையில் செய்யப் படுவதைப் பார்த்தேன். கூட்டுறவு முறையினால் ஒருநாள் ஒன்றுக்கு ஒரு இடத்தில் இருபதினாயிரம் முப்பது ஆயிரம் வீதம் ஷர்ட்டுகள் டிரௌசர்கள், ஜாக்கட்டுகள் தயாரிக்கப்படுகின்றன. அங்கு உள்ள அத்தனை பேரும் வேலையிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். அங்கு வேலையில்லாதவர்களே கிடையாது.

இங்கு நாம் துணி வாங்கிக் கொடுத்தால் காலே அரைக்கால் பாகம் திருட்டுடன் சேதமாகிறதென்றும் சொல்லலாம். அங்கு அப்படியில்லை. துணியை அப்படியே 200, 300 வீதம் மடிப்பு மடித்து முதலிலேயே சின்ன சின்ன வேலைக்கானவைகளுக்கு அதாவது பாக்கெட், கழுத்துப் பட்டை, கைப்பட்டை முதலானவைகளுக்கு ரம்பத்தில் அறுப்பது போன்ற மிஷினில் அறுத்து எடுத்துக்கொண்டு பாக்கியை அப்படியே சேதாரம் இல்லாமல் முழுதும் மற்ற பாகங்களுக்கு உபயோகப்படுத்திவிடுகிறார்கள்.

அங்கு ரஷியாவில் 2,000—3,000 மக்கள் சந்தோஷமாக—சௌக்கியமாக போதிய சுகாதாரத்தோடு ஒரே கட்டிடத்தில் நிரம்பி வாழ்வதைப் பார்த்தேன். இங்கு நம்முடைய ஒரு வீட்டை 4, 5 பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கென்று எவ்வளவு அனாவசியமாக ?: 4 அடுக்கு மெத்தைகளுடன் கட்டுகிறோம்? அதில் பகுதி பாகம் நாம் உபயோகப்படுத்துவது கூட இல்லை. அப்படி உபயோகப்படுத்தும் பாகத்தில் சுத்தம், சுகாதாரம் இருப்பதில்லை. நம்முடைய வீட்டை நிரப்புவது ஒடிந்துபோன மத்து, கெட்டுப்போன நாற்காலி, முறம், கூடை, கிழிந்து போன பாயும், அவிந்துபோன தானிய குப்பைகளும் தான். இந்த முட்டாள்தனத்திற்காகவா நாம் பெரும் வீடு வைத்துக்

(12-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என் மகளைப் பலியிடுவதற்கு சமமாகும்.

புரோகிதன்: ஒரு ஆடு-அவன் மகள், இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

(விக்கிரகத்தின் பின் புறமிருந்து சத்தம்)

"எல்லா ஏழைகளும் ஆடுகளே"

புரோகிதன்-ஆட்டைக்கொல்லுங்கள்.

ஆட்டை கொல்லப்போகும் அதே சமயம் ஒரு சாது உள்ளே வருகிறார்.

ஜனங்கள்: யார் அது? ஓகோ! அவர்தான் கடவுளைப்பற்றி பக்தி ரசம் ஒழுகப் பாடிப் புகழ்ந்து எழுதிய பக்தர். அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது.

சாது: கடைசியாக பைத்தியக்காரனானதற்கு சந்தோஷிக்கிறேன். நாம் எல்லோரும் ஏன் கஷ்டப்பட வேண்டும், முட்டாள்கள்.

ஜனங்கள்: நாங்கள் எல்லோரும் கஷ்டப்பட்டுத்தான் தீர வேண்டுமென்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். தாங்களும் கூட முன்னம் சொல்லியிருக்கிறீர்கள், எழுதியிருக்கிறீர்கள்.

சாது: அப்படியா...நான் என்னுடைய பாட்டுகளையெல்லாம் சுட்டுக்கொளுத்திவிட்டேன். பொய்யும் முட்டாள்தனமும் மோசமும் நிறைந்த முந்திய நாட்களைப் புதைத்துவிட்டேன். என் வீட்டின் மேல் மாடியில் உட்கார்ந்து கொண்டு, பசியினால் வாடுகின்ற உலகத்தைப் பார்த்து அது 'கடவுள் சித்தம்', 'கர்ம வினை' என்று புலமை நிறைந்த பாட்டுகள் பாடுவது தவறு, தவறுமட்டுமல்ல முட்டாள்தனம் கலந்த அயோக்கியத்தனம் என்ற திட்டமான முடிவுக்கு வந்துவிட்டேன்.

கடவுளைப்பற்றி நான் அவ்வளவு புகழ்ந்தெழுதியதற்குக் காரணம் சௌக்கியமான வீட்டில் நான் வசித்துவந்தது. காலந்தவறாது கவலையின்றி உணவருந்தினேன். புஷ்பங்களும், பறவைகளும் அழகானவையென்று நினைக்க சாவகாசமிருந்தமையால் அவைகள் அழகானவை என்று எண்ணினேன். கடவுள் என்றால் என்ன? கவலையற்ற சாப்பாடும், அதன் பின்னர் ஏற்படுகிற கவலையின்மையும் சேர்ந்து உண்டாகிற முடிவே.

நீங்கள் பல நாள் பட்டினி கிடந்தீர்களானால் கடவுள் காற்றாய்ப் பறக்கிறார்! கடவுள் என்பது செல்வந்தர்களது பொழுது போக்கு என்பதும் ஏழைகளை நசிப்பிக்க சவுகரியமான ஓர் போதை வஸ்து என்பதும் எனக்கு இப்போதுதான் தெரியவந்தது. **பணக்காரர்களுக்கு நிறைய உணவும் ஓய்வும் பிறரை வஞ்சிக்கவேண்டிய அவசியமும் இருக்கின்றது ஆகவே அவர்கட்குக் கடவுள் இருக்கின்றது. ஆனால் ஏழைகளுக்கோ உணவில்லை. உடை இல்லை, ஓய்வில்லை ஆகவே அவர்கட்குக் கடவுள் இல்லை.** இந்த உண்மைகளை, வறியனாகி, அதிக துன்பங்களை அனுபவித்த பிறகே நான் அறிந்துகொண்டேன்.

ஓர் வயோதிகமாது: நான் ஏழை எப்போதும் ஏழை. ஆனால் கடவுளைப்பற்றி எண்ணம் உண்டாகிக்கொண்டேயிருக்கிறது. சாகின்ற நிலையிலுங்கூட அந்த எண்ணம் உண்டாயிற்றே, அது ஏன்?

சாது: அது இயற்கைதான். ஒரு சிலர் ஏழையோரை கடவுள் என்ற மதுவை உண்ணும் கெட்ட பழக்கத்தில் ஆழ்த்திவிட்டார்கள் ஆகவேதான் பணக்காரர்களின் கற்பனைப் பொருளாகிய "கடவுள்" ஏழைகள் மனதையும் கைப்பற்றிவிட்டார்! ஒரு முறை குடிக்கப்பழகிவிட்டால் பிறகு தடுப்பது முடியாத காரியம். கடவுள் என்ற மதுவை உண்ணத்தொடங்கிவிட்டவர்களையும் பிறகு மீட்கமுடியாதிருப்பதற்கு இதுதான் காரணம். இந்த மதுமயக்கத்திலிருந்து நீங்கள் மீளவேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. இனி நீங்கள் முதலாளிமார்களிடம் உணவு உணவு என்று மண்டியிட்டுக் கெஞ்சக்கூடாது' உங்கள் உரிமைகளை நீங்கள் இனிப் போராடிப் பெறவேண்டும். போராட்டம் அது ஒன்றுதான் உங்களை இன்பபுரிக்கு அழைத்துச் செல்லும்.

ஜனங்கள்: பெரியோர்களெல்லாம் அதற்காக வணங்கி, விரதமிருந்து தவமிருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களே!

சாது: தெய்வ வணக்கம்...... மது......ஆம் அதிக நாளாய் நாம் அந்த மயக்கத்தில் இருந்து விட்டோம். தோழர்களே! தோழியர்களே! உண்மையாய்ச் சொல்லுங்கள், **நீங்கள் வாழ்நாளெல்லாம் தெய்வ வணக்கம் செய்தீர்களே கடவுள் எப்போதாவது செவிசாய்த்து உங்கள் முறையீட்டைக் கேட்டதுண்டா?** செல்வந்தர்கள் அதிகமாக கோவிலுக்குப் போவதையும் தெய்வத்தை வணங்குவதையும் பார்த்திருக்கிறீர்களா? அப்படிப் போனாலும் சகல ஆடம்பரங்களோடும் தங்களை ஏழையோர் நன்கு மதிக்கவேண்டும், கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடேயே போகிறார்கள் என்பதும் தாங்களறியீரா?

புரோகிதர்கள்: அவனை (அந்த சாதுவை)ப் பிடித்து வெளியே தள்ளுங்கள். பைத்தியக்காரனைப் போல உளறுகிறான் அவன்.

சாது: நாங்கள் பசியாய் இருக்கிறோம். உணவு வேண்டும். இந்தக் கல்லைக் (விக்ரகத்தை சுட்டிக்காட்டி) கேட்கிறோம், உம்மிடம் எங்களுக்குப் பேச்சில்லை.

புரோகிதர்கள்: உன்னுடைய முட்டாள்தனத்தையெல்லாம் அவிழ்த்து விடாதே, அதிகப் பிரசங்கமடையா, மரியாதையாகப் போய்விடு, இல்லாவிடில் போலீஸ்காரரைக் கூப்பிடுவோம். நீ கடவுளையும் எங்களையும் அவதூறாய்ப் பேசுகிறாய்.

ஜனங்கள்: அந்தோ! அநியாயம், அவரைப் பிடித்துக் கைதியாக்கி அடைத்து விடுவார்களே!

சாது: அறியாமையிலும், மூடநம்பிக்கையிலும் உழலும் உங்கள்

தோழமைக் கழகம் சென்னை

12—2—49 சனி மாலை 6-மணி பிராட்வே டாக்கீஸ் அருகில் உள்ள சண்முகராயன் சந்தில். இக் கழகத் திறப்பு விழா நிகழும்.

தலைவர்:

தோழர் முனுசாமி M. C.

திறப்பாளர்:

தோழர் ஜீவரத்தினம் M. C.

பேச்சாளர்:

இரா. நெடுஞ்செழியன் M. A.

மா. இளஞ்செழியன் B A. (Hons)

சிறையைவிட வேறு சிறை இருக்க முடியுமா? புரோகிதர்களே! நீங்களும் உங்கள் கடவுளும் பேடிகள். சக்தியற்றவர்கள். உங்களை நீங்களே காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை. போலீஸ் உதவி கொண்டு உங்களையும் உங்கள் கடவுளையும் காப்பாற்றிக் கொள்ளப் பார்க்கிறீர்கள்.

சாது: பசியால் வாடும் ஜனங்களே! புரோகிதர்கள் பரம்பரை ஜாலவித்தைக்காரர்கள். உங்களுடைய அறியாமையையும், மூட நம்பிக்கையையுமே கருவியாகக் கொண்டு அவர்கள் உங்களிடம் பணம் பறித்து, உண்டு கொழுத்து வருகிறார்கள். இந்த ஜன்மத்தில் நன்மை செய்தால் அடுத்த ஜன்மத்தில் பலன் அநுபவிக்கலாம் என்கிறார்கள். முன் இறந்தவர்கள் யாராவது வந்து நம்மிடம் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்களா? அல்லது நாமாவது அறிய முடிகிறதா? கிடையவே கிடையாது. இன்று கஷ்டப்படுகிற நமக்கு இன்றே பரிகாரம் கிடைக்க வேண்டும். இல்லையேல் அது மோசடியும், முட்டாள் நம்பிக்கையுமே யாகும். அதை நீங்கள் ஏன் நம்பவேண்டும்?

புரோகிதர்: நாங்கள் உன்னை சபிக்கிறோம்.

சாது: புரோகிதர்கள் ஆசீர்வதிக்க அறியார்களே!

புரோகிதர்: நீ அதிகம் பேசினால் கடவுள் உன்னைக் கொல்வார்.

சாது: உமது கடவுளை நான் கொல்லுகிறேன் பார்.

(சாது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து விக்கிரகத்தை உதைத்துத் தள்ள அதன் கீழ் தங்க நாணயங்கள் குவிந்து கிடக்கின்றன.)

புரோகிதர்கள்: நாம் மோசம் போனோம், நமது ரகசியமெல்லாம் வெளியாய் விட்டன. நமது பிழைப்பே போய்விட்டது.

சாது: (ஜனங்களைப் பார்த்து) இப்பொழுது உங்கள் கண்களினால் உண்மையைக் கண்டுணருங்கள். அதோ தங்க நாணயங்களைப் பாருங்கள்.

ஜனங்கள்: ஆ என்ன ஆச்சரியம்! தங்க நாணயங்கள்!

சாது: ஒவ்வொரு நாணயமும், நம்முடைய ரத்தத்தின் துளிகளாகும். நாம் கொண்டுவந்து கொண்டுவந்து கொட்டிய பிரார்த்தனைக் காசுகளே இந்தத் தங்க நாணயங்கள். எடுத்துக்கொள்ளுங்கள். பயப்படாமல் எடுத்துக் கொள்ளுங்கள். இவை உங்கள் பணம், உங்கள் வியர்வையே, இரத்தமே, கஷ்ட நஷ்டமேதான் இந்த நாணயங்களாக உருமாறி இருக்கின்றன. மதம் உங்கள் உழைப்பை உறிஞ்சியே தழைக்கிறது அந்த மதத்தை ஒழித்துக் கட்டுங்கள். மதம், உங்களை மயக்கும் அபின்; அந்த அபின் உருண்டையை உதறித் தள்ளுங்கள்.

[திரை விழுகிறது]

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

திருடனையும் பிடித்து விடலாம்

உங்கள் வீடுகளில் திருடர்கள் புகாதபடி தடுக்கவும் ரேடியோ பயன்படும்; திருடன் புகுந்துவிட்டால் ரேடியோயந்திரம் மணியடித்து எச்சரிக்கை செய்வது மட்டுமின்றி, அவனை அப்படியே 'ஒளிவெள்ள'த்தில் அமிழ்த்திவிடும். விஷவாயுப் பிரயோகத்தினின்றும் வேறு முகமூடியொன்றும் இல்லாமல் ரேடியோ மூலம் பாதுகாத்துக் கொள்ளும் வழியையும் புரொபஸர் அந்தோனி என்பவர் கண்டு பிடித்திருக்கிறார். இது பிரிட்டனிலே பெரிய பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. இதன் பயன்களைக் குறித்து ஆராய்ச்சி செய்ய ஓர் அறிஞர் குழுவை அமைக்கும்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கேட்டிருக்கின்றனர். உண்மையெது, பொய்யெது என்பதைக் கண்டுபிடிக்கவும்கூட ரேடியோ பயன்படலாம். உண்மை எழுதுபவனுடைய எழுத்திற்கும் பொய் எழுதுபவனுடைய எழுத்திற்கும் ரத்த அழுக்கில் ஏற்படும் வேற்றுமை மூலம் ரேடியோ யந்திரம் உண்மையைக் கண்டுபிடித்துவிட முடியும்.

150 அடி ஆழத்துக்குள்ளே மறைந்திருக்கும் புதையல்களைக் கண்டு பிடிக்கும் யந்திரமொன்றை காலிபோர்னியாவைச் சேர்ந்த டாக்டர் பிஷர் என்பவர் கண்டு பிடித்துள்ளார். கீழே கிடக்கும் தண்ணீர்க் குழாய்களைக் கூட அது உணர்த்து சொல்கின்றது. உலகின் பல பாகங்களிலும் ஏராளமான பேர் இதை உபயோகித்துப் பயன் பெற்றிருக்கின்றனர். ஆரிசோனாவில் ஒருவன் சமீபத்தில் இதன் உதவியால், தங்கம், வெள்ளி, செம்பு உள்பட 14000 பவுன் பெறுமானமுள்ள புதையலைக் கண்டெடுத்தான்.

மனித வாழ்க்கையின் நலத்துக்கு அடிப்படையான இன்னும் பல துறைகளில் ரேடியோ முக்கிய[illegible]யம்புரிகின்றது 'டெலிவிஷன்'(தூர திருஷ்டி)—உலகின் ஒரு கோடியில் நடப்பவற்றை மறுகோடியிலிருந்து நேருக்கு நேராகத் தத்ரூபத்தில் பார்ப்பது—இது இக்காலத்தில் கொஞ்சம் அதிகச் செலவு பிடிப்பதாயிருப்பினும், ஒவ்வொரு வீட்டிலும் அமைக்கப்படத் தக்க வசதியான விலைக்கு வரக்கூடிய காலம் விரைவில் வருமென்பதில் ஐயமில்லை.

டெலிவிஷன் மூலம் நெடுந்தொலைவில் இருப்பவர்களும் ஒருவருடன் ஒருவர் பக்கத்தில் இருந்து கொண்டு பேசுவதைப் போலவே பேசிக்கொண்டிருக்கமுடியும் என்பது மட்டுமல்ல, ஒருவர் உருவத்தை ஒருவர் பக்கத்தில் இருப்பதைப் போலவே காணமுடியும்; நேரில் பேசுவதைப்போலவே பேசமுடியும். இனி ஒரு சில ஆண்டுகளில் இந்த அற்புதமான கருவி உலகெங்கும் சர்வசாதாரணமாகக் கையாளப்படப்போகிறது என்பதை நாம் அறுதியிட்டுக்கூறலாம்.

வாங்கிவிட்டீர்களா?

★

C. N. A. தீட்டிய

அறப்போர் 1 0

இலட்சிய வரலாறு 1 0

அண்ணாவின் ஏனைய நூல்கள் யாவும் கிடைக்கும்.

★

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு,

சென்னை.

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

கொண்டு இருப்பது என்பதை நினைத்துப்பாருங்கள்.

அங்கு எப்படி வீட்டு வசதி முறை இருக்கின்றதென்று கேட்கலாம். சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கும், சாதாரணத்தொழிலாளிக்கும் சுமார் 10-க்கும், 16 அடிக்கும் உள்ள ஒரே மாதிரி அளவு அறைதான். அங்கு ஒரே மாதிரி சாதிக்காய் பலகை கட்டிலும், மேஜையும் சிறப்பாக இருக்கும். அங்கு ஒரு சிறு 8X6 உள்ள கக்கூசு நூற்றுக்கணக்கானவர்களுக்கு உபயோகப் படுகிறது. தோட்டியே கிடையாது. அதைப்பார்த்தால் அது கக்கூஸா என்று நாம் சந்தேகப்பட்டே போய்விடுவோம். அவ்வளவு சுத்தம். அதில் எவ்வித வாடையும் இருக்காது. அழகு, ஒழுங்கான முறை எல்லாம் சேர்ந்திருக்கிறது. இங்கு ஒரு வீட்டுக்கு 5 பேருக்கு ஒரு கக்கூசாக இருக்கிறது அதற்கு எவ்வளவு இடம்? அப்படி இருந்தும் என்ன சகிக்கமுடியாத நாற்றம், சுகாதாரக்குறைவு? இங்கு 30 பேர்களுக்கு ஒரு தோட்டி வீதம் இருப்பானென்று நம்புகிறேன். இப்படியிருந்தும் இங்கு அசுத்தம் அசுத்தந்தானே, என்றும் அசௌக்கியமாகத்தானே இருக்கிறது. அங்கு கக்கூசுக்கு பக்கத்திலேயே படுக்கை அறை இருக்கும். என்றாலும் அங்குள்ள முறையால் கஷ்டத்திற்கோ — நாற்றத்திற்கோ இடமில்லை வழியுமில்லை.

ஒவ்வொரு கூட்டுப்பண்ணையிருக்கும் இடத்திலும், ஒவ்வொரு தொழிற்சாலை இருக்கும் இடத்திலும் ஒரு நல்ல பூந்தோட்டம், சினிமா, விளையாட்டு இடம், டிராமா, சுகாதார வசதிச்சாலை எல்லாம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு ஸ்தாபனத்திலும் உள்ள 5000 பேருக்கும், 10000 பேருக்கும் கூட்டுறவு முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்டு சம்பளம் ஒரே அளவுதான் கொடுக்கப்பட்டு வருகிறது. சம்பளம்போக மேல் கொண்ட மீதி லாபத்தை அந்த ஸ்தாபன் பொது ஜனங்களுடைய நன்மைக்கே உபயோகப் படுத்தப் படுகிறது.

இங்கு ஒரு மனிதனுக்கு ஒரு வண்டியிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதில் அவன் எப்பொழுதும் போய்க்கொண்டிருக்கிறான்? அதற்கு தினம் 10 மணி நேரத்திற்கும் வீணில் தீனி போட்டு, 3-மணி நேரத்திற்கும் குறைவாகவே வேலை வாங்குகிறான், 3-மணி நேரம் மாத்திரம் அனுபவிப்பதனால் பாக்கி 7-மணி நேர கூலியும் செலவும் முதலும் வீணாகிறது. இப்படியே தான் ஒவ்வொரு விஷயத்திலும் தனிப்பட்டவர்கள் தன்மையால் நஷ்டங்கள் உண்டாகின்றன. அநேகமாய் நம்முடைய நாட்டில் தேசசெழிப்பும் அனுபவப்பொருள்களுற்பத்தியும் ஒன்றுக்கு எட்டாக விளங்குகிறதா இல்லையா? அப்படி இருந்தும் மக்களின் கஷ்டத்திற்குக் காரணம் என்ன? தனித்தனி, அவனவன் சுயநலம் என்னும் உணர்ச்சியே இதற்குக்காரணம். எனவே இந்த உணர்ச்சி ஒழியவேண்டுமா வேண்டாமா? மனிதனுக்குக்கவலையற்றும், குறைவற்றும் வாழும் வாழ்வுதான் சிறந்தது. அதற்குக் கூட்டுறவுமுறையே தான் பெரிதும் தேவையானது.

ஒவ்வொரு ஊரில் உள்ள நகராண்மைக் கழகமே அந்த ஊராரின் வாழ்க்கை சம்பந்தமான எல்லா விஷயங்களையும் மேல் கண்டபடி கூட்டுறவு முறையில் பூர்த்தி செய்விக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு பிரயோஜன மேற்படும்? எவ்வளவு செலவு மிச்சமாகும்? எவ்வளவு அனுகூலம்? எவ்வளவு லாபம்? எல்லாவற்றிலும் நன்மையேதான் ஏற்படும். அப்படிக்கிருக்க தனிப்பட்டவர்கள் நன்மைக்கு மாத்திரம் என்பதாக ஏன் ஒவ்வொன்றும் இருக்கவேண்டும்?

ஒரு சாப்பாட்டு விடுதியை பொதுவாக பல குடும்பங்களுக்குச் சேர்த்துவைத்து நடத்தினால் இரண்டணாவுக்கும் கீழாகவே நல்ல சாப்பாடு போடலாம். அது சத்துள்ளதாகவும், சுகாதார முறைப்படியும் இருக்கும். நம் வீட்டில் சமையல் என்னும் பேரால் சரிபாக சாமான்கள் வீணாய்ப்போகிறது. நம்முடைய நாட்டில் என்ன பொது உணர்ச்சி இருக்கிறது? பொது சமயல்களில் டாக்டர் பரீக்ஷை செய்து எவ்வளவு சௌக்கியமாக எத்தகைய காரியங்களைச் செய்யலாம். இது போலவே வியாபாரத்திலும் கடையில் வியாபாரம் செய்யும்போது கிராமக் குடியானவனிடம் 9-சாக்குப் போட்டு விட்டு 10-சாக்கு என்று பித்தலாட்டம் செய்வது எனக்குத் தெரியும். குடியானவனிடமிருந்து ஒன்றுக்கு ஒன்றரையாய் எடுத்துக் கொள்வதும் எனக்குத் தெரியும்.

நம்மிடம் நிறைந்திருப்பது பொய். சரக்கோ கலப்படம். உபயோகிப்பதோ முக்கால் அளவுள்ள நிறைதான். இவைகளினாலெல்லாம் தனிப்பட்டவர்க்கு எவ்வளவு நஷ்டம்? இவையெல்லாம் கூட்டுறவு முறையில் லக்ஷியம் கொண்ட ஜனத்தலைவர்கள் என்பவர்கள் ஏன் செய்து அடக்கி தடுக்கக்கூடாது? ஒவ்வொரு தனிப்பட்டவனையும் ஒன்றுபடுத்தி "நீயும் வா, எல்லோரும் ஒரு காரியத்தைச் செய்வோம். எல்லோரும் லாபம் பெறுவோம்" என்று ஏன் கூட்டுறவு தன்மை பிரயோகிக்கக்கூடாது?

மனித சமூக நல்வாழ்க்கைக்கு இம்முறைகள் என்றைக்காவது தலை தூக்கித்தான் ஆகவேண்டும்; வட்டி விஷயத்திலும் இங்கு பாங்குகளில் ஏராளமான ரூபாய் தூங்குகிறது. ஆனால் குடியானவன் விவசாய செலவுக்கு பணம் வேண்டுமானால் தனிப்பட்ட முதலாளியிடம் மாதம் 1-க்கு ரூ 10-க்கு கால் ரூபாய் வட்டி வீதம் கடன் வாங்குவதென்றால் என்ன கொடுமை? ஆனால் ரஷ்யாவைப் பாருங்கள். ரஷ்யாவில் தனிப்பட்ட மனிதர் எவரும் லேவாதேவி செய்யக் கூடாது. ஒருவனுக்கு மற்றொருவன் 5-ரூபாய் கடன் கொடுத்தால் அது அங்கு திருட்டு ஆகிவிடுகிறது. ஆபத்தில் உதவ வேண்டாமா என்றால் — கஷ்டத்துக்காக வேண்டுமென்றால்—ஏன்-எப்படி ஆபத்தும் கஷ்டமும் ஏற்படும் என்பதுதான் அங்கு கேட்கப்படும் கேள்வியாகும்.

மக்கட்சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகி விடவேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிடவேண்டும். பலருடைய நன்மைக்கும் என்றே கருதி வாழ்

[7-ம் பக்கம் பார்க்க]

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)